Register No. | | | | | | | | |

**TA4B**

**5735–23**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three – year Regular Course)

Second Year – Fourth Semester

ADMINISTRATIVE LAW

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the theory of Rule of Law. Critically examine the views of Prof.Dicey on Rule of Law.

   சட்டத்தின் ஆட்சி என்ற கொள்கையை விவரி. பேராசிரியர் டெய்சியின் சட்டத்தின் ஆட்சி குறித்த கருத்துகளை சீராய்க.

2. "The various components of Fair hearing are not fixed but are flexible and their scope and applicability differ from case to case" – Elucidate.

   "நியாயமான விசாரணை என்பதன் பல்வேறு கூறுகள் நிலையானவை அல்ல. அவை நெகிழ்வுத் தன்மை கொண்டவை. மேலும் அவற்றின் அளவுகையும் பொருந்தும் தன்மையும் வழக்கிற்கு வழக்கு மாறுபடும்" – விளக்குக.

3. Discuss the role of 'Ombudsman' in remedying citizen's grievances against the administration? Compare its development in India with other countries.

   நிர்வாகத்திற்கு எதிராக குடிமக்களின் முறையீடுகளுக்கு தீர்வு காண்பதில் 'ஆம்புட்ஸ்மன்' பங்கு குறித்து விவாதிக்க. இந்தியாவில் அதன் வளர்ச்சியை பிற நாடுகளுடன் ஒப்பிடுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the Judicial control of delegated Legislation in India.

   இந்தியாவில் அதிகார ஒப்படைவு பெற்று ஆக்கப்படும் விதிகளை நீதிமன்றம் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றது என்பதை விளக்குக.

5. "The concept of Locus standi has been changed beyond recognition" – Elucidate.

"வழக்கீடு உரிமை என்ற கருத்தமைவு அங்கீகரிப்பிற்கு அப்பால் மாற்றப்பட்டுள்ளது" – விவரிக்க.

6. Discuss the origin, appointment, object, powers and functions of Administrative Tribunals.

நிர்வாகத்துறை தீர்ப்பாயங்களின் தோற்றம், நியமனம், நோக்கம், அதிகாரங்கள் மற்றும் பணிகளைப் பற்றி விவாதிக்க.

PART C – (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following.

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Conditional Legislation

நிபந்தனைக்குட்பட்ட விதியாக்கம்

(b) Henry VIII Clause.

ஹென்றி எட்டாவது பிரிவு

(c) Writ of prohibition

தடையுறுத்தும் நீதிப் பேராணை

(d) Promissory Estoppel

வாக்குறுதி வழி முரண்தடை

(e) Speaking orders

காரணம் விளம்பும் ஆணைகள்

(f) Domestic Tribunals

உள்ளகத்துத் தீர்ப்பாயங்கள்

(g) A.K.Roy Vs. Union of India.

ஏ.கே.ராய் எதிர் இந்திய ஒன்றியம்

PART D – (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. State Government has appointed a committee to select books for the libraries of schools and colleges. The committee selected books written by the same committee members. Those authors whose books were not selected challenged this decision. Decide.

பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் நூலகங்களுக்கு புத்தகங்களை தேர்ந்தெடுத்து வாங்குவதற்காக ஒரு குழுவை மாநில அரசு நியமித்தது. இந்த குழுவின் உறுப்பினர்கள் சிலர் அவர்கள் எழுதிய புத்தகங்களையே தேர்ந்தெடுத்தனர். தங்கள் புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்படாத புத்தக ஆசிரியர்கள் குழுவின் முடிவை எதிர்க்கின்றனர். – தீர்மானிக்க.



9. "A" was arrested on the ground of suspicion that he was a smuggler of gold. The gold ornaments were confiscated from him and were kept in the Court's property section. After trial, he was acquitted by the court giving him benefit of doubt. Subsequently, he filed a petition for return of his gold ornaments. They were found missing from the property section of the Court. The state refused to accept liability on the ground that the function was sovereign in nature. Will the state succeed?

'அ' என்பவர் தங்கக் கடத்தல்காரர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்படுகிறார். அவரிடமிருந்து நகை மற்றும் ஆபரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவைகள் அனைத்தையும் நீதிமன்றத்தில் பொருள்கள் வைக்கும் காப்பகத்தில் வைக்கப்பட்டன. விசாரணைக்கு பிறகு, 'அ' என்பவருக்கு சந்தேகத்தின் பலனை அளித்து நீதிமன்றம் விடுதலை செய்கிறது. அதற்கு பிறகு, அவர் தனது தங்க ஆபரணங்களை திரும்பக் கேட்டு மனு தாக்கல் செய்கிறார். தங்க நகைகள் அனைத்தும் நீதிமன்ற பொருட்கள் வைக்கும் காப்பகத்திலிருந்து காணாமல் போய்விட்டது. அரசு தன் செயல் இறைமைச் செயல் என்ற அடிப்படையில் பொறுப்பு நிலையை மறுக்கிறது. அரசு வெற்றி பெறுமா ?

10. A statute had imposed a contribution of not exceeding 10% of its income on every religious institution payable to the government. This legislation was challenged on the ground that the levy is invalid. Decide.

ஒரு சட்டத்தின் வாயிலாக மத சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அதனுடைய மொத்த வருமானத்திலிருந்து 10% மிகாமல் அரசிற்கு செலுத்த வேண்டுமென கூறப்பட்டிருந்தது. இச்சட்டம் செல்லாததென வழக்கென்று தாக்கல் செய்யப்படுகிறது. முடிவு காண்க.

———